தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேல் நிலைத் தொட்டி கட்டும் பணி.

67— (*வினா எண் 9230) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் நகராட்சியில் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிகள் எப்பொழுது துவக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகராட்சியின் தற்போதைய மக்கட்தொகையைக் கருத்தில் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிவடைந்தவுடன் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வாரியம் மற்றும் அரசின் அனுமதியுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் போல் தோன்றுகிறது. இதற்கிடையில் தாம்பரம் மறை மலை நகருக்கு அருகில் உள்ள பகுதியில் இப்போதுள்ள வீடுகளுக்குப் போக மிச்சம் உள்ள நீரை, இடைகாலத்தில், இந்த வறட்சி நேரத்தில், பயன்படுத்திக் கொள்ள, அரசு தாம்பரம் நகரத்திற்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போதைய திட்டத்திற்கு தாம்பரம் நகராட்சி இப்போது தான் ஆய்வுத் தொகை செலுத்தியிருக்கிறது. புதிய திட்டம் ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பு மானால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

கலைவாணர் வாழ்க்கை வரலாறு.

68—(*வினா எண் 7241) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலைவாணர் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக வெளியிட அரசு முடிவு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் பற்றிய நூல்வெளியீட்டுக்கு இயல் இசை நாடக மன்றம் மானிய உதவி வழங்கி நூல் வெளியிடப்பட்டுள்ளது.